# <u>செய்திக் குறிப்பு</u>

இன்று (12.10.2023) சென்னை எழும்பூரில் உள்ள சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைமை அலுவலகத்தில், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் கோயம்பேட்டில் கட்டப்பட்டுள்ள (Tower - III) அடுக்குமாடி அலுவலக வளாகத்திற்கு Indian Green Building Council (IGBC)-யின் கோல்ட் தர சான்று வழங்கும் விழா நடைபெற்றது.

இதில் கட்டிடத்திற்கான கோல்ட் தரச் சான்றிதழ் மற்றும் பட்டயத்தை சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் திரு.அன்சூல் மிஸ்ரா, I.A.S., அவர்களிடம் திரு.அஜீத் சோர்டியா, தலைவர், சென்னை மண்டலம் IGBC அவர்கள் வழங்கினார். இதில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் பொறியாளர்கள், கட்டிடத்தின் கலந்தறிவாளர்கள் (Consultants), திரு.சி.ஆர்.நாராயண ராவ், பிராஜெக்ட் பிரைவேட் லிமிடெட், M/s.பி&சி பிராஜெக்ட் பிரைவேட் லிமிடெட் மற்றும் M/s.Lead Consultancy & Engineering services பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்களைச் சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

இக்கட்டிடத்தின் பரப்பளவு சுமார் 1,87,140 சதுர அடி கொண்டது. இதில் மூன்று அடித்தளங்கள் ஒரு தரைதளம் மற்றும் ஒன்பது மேல் தளங்கள் கொண்டது. இதில் பயன்படுத்தப்படும் நீர் மறு சுழற்சி முறையில் மீண்டும் பயன்படுத்தப்படுகிறது. மின்தேவையை குறைக்கும் பொருட்டு LED மின்விளக்குகள் மற்றும் சூரிய மின் ஆற்றலும் பயன்படுத்தப்படுகிறது. இதனால் இக்கட்டிடம் சுற்றுச்சூழலுக்கு உகந்தவையாக உள்ளது. மேலும் இது சென்னை மண்டலத்தின் முதல் அரசு அலுவலக பசுமை கட்டிடம் என்ற சிறப்பைப் பெறுகிறது.